மின்னிதழ் E-paper
# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
12.07.2020 ஞாயிற்றுக்கிழமை

## மொறட்டுவையில் ஒருவரை அதிகாலை சுட்ட பொலிஸ்!

கொழும்பு, ஜூலை 12

மொறட்டுவை - லுனாவ பகுதியில் பொலிஸாரின் கடமைக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டில் 39 வயதான ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டதையடுத்து அங்கு பதற்ற நிலை உருவாகியுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை 12.30 அளவில் இடம்பெற்றுள்ளது.

இந்தப் பகுதியில் கண்காணிப்பு நடவடிக்கையில், ஈடுபட்டிருந்த அங்குலான

02

## கந்தக்காட்டில் மேலும் 5 பேருக்கு கொரோனா தொற்று உறுதியானது!

### 70 சிறுவர்கள் உட்பட 325 பேர் தனிமைப்படுத்தல்

கொழும்பு, ஜூலை 12

கந்தகாடு புனர்வாழ்வு மத்திய நிலையத்தில் தொற்றுக்கு உள்ளானவர்களுடன் நெருங்கிப் பழகிய 5 பேருக்குக் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகச் சுகாதார அமைச்சு நேற்று இரவு அறிவித்துள்ளது.

இதையடுத்து, நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை 2464 ஆக அதிகரித்துள்ளது.

இவர்களில் இருவர் வெலிகந்தைப் பகுதியைச் சேர்ந்தவர்கள் எனவும் ஏனைய மூவரும் ஹபராதுவ, ராஜாங்கனை மற்றும் லங்கபுர பகுதிகளைச் சேர்ந்தவர்கள்

02

## இதுவரை 2620 தேர்தல் முறைப்பாடு

கொழும்பு, ஜூலை 12

2620 தேர்தல் முறைப்பாடுகள் இதுவரை கிடைக்கப்பெற்றுள்ளதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அவற்றில் 1937 முறைப் பாடுகள் மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத் துவ மத்திய நிலை யத்துக்கும் 683 முறைப்பாடுகள்

02

## தேர்தல் முடிந்ததும் எம்.சி.சி கைச்சாத்து

# அமெரிக்க இராணுவம் சீருடையுடன் நுழையும்!

### எச்சரிக்கின்றது ஜே.வி.பி.



கொழும்பு, ஜூலை 12

நாடாளுமன்றத் தேர்தல் நிறைவு பெற்றவுடன் மிலேனியம் சவால் (எம்.சி.சி) ஒப்பத்தத்தில் கோட்டாபய அரசு நிச்சயம் கைசாத்திடும் என்று களுத்துறை மாவட்ட ஜே.வி.பி. வேட்பாளர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

02


## விமலேஸ்வரியிடம் 1,000 கோடி ரூபா மானநஷ்டம் கோரும் சுமந்திரன்

யாழ்ப்பாணம், ஜூலை 12

இலங்கை தமிழ் அரசுக் கட்சியிலிருந்து நீக்கப்பட்ட மகளிர் அணியின் முன்னாள் செயலாளர் சி.விமலேஸ்வரி யிடம் 1000 கோடி ரூபா மனநஷ்டம் கோரிக் கடிதம் அனுப்பியுள்ளார்

02

## தபால் மூல வாக்களிப்பு நாளை ஆரம்பம்



கொழும்பு, ஜூலை 12

2020ஆம் ஆண்டு பொதுத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு பல கட்டங் களின் கீழ் நாளை திங்கட் கிழமை ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 14ஆம் 15ஆம் தினங்களில் அரச பணியாளர்களுக்கும் 16ஆம் 17ஆம் திகதிகளில் பொலி ஸார் மற்றும் முப்படையின ருக்கும் தபால் மூலம் வாக்களிக்க வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

இதற்கமைவாக எதிர் வரும் 13ஆம் திகதி சுகாதாரப் பணியாளர்கள், குடும்ப சுகாதார சேவையாளர்கள் உள்ளிட்டோர் வாக்களிக்கவுள்ளனர்.

## வெளிநாடுகளில் சிக்கியோரை அழைத்துவருவது இடைநிறுத்தம்

கொழும்பு, ஜூலை 12

இலங்கையில் கொரோனா 2ஆவது அலை தாக்கம் அதிகமாக உணரப்படும் நிலையில் வெளிநாடுகளில் சிக்கியுள்ள இலங்கையர்களை மீட்கும் நடவடிக்கையைத் தற்காலிகமாக மீண்டும் நிறுத்த முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இதற்கு அமைவாக வரும் ஜூலை 14ஆம் திகதியில் இருந்து இந்த நடவடிக்கை யைத் தற்காலிகமாக நிறுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக வெளி யுறவு அமைச்சின்

02

## தேர்தலின் பின் கூட்டமைப்புடன் இணைவாராம் விக்னேஸ்வரன்!

### சொல்கிறார் கஜேந்திரகுமார்



யாழ்ப்பாணம், ஜூலை 12

மாற்று அணி என கூறும் சி.வி.விக் னேஸ்வரன் கட்சிகூட தேர்தல் முடிந்த பின்னர் நாடாளுமன்றத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து செயற்படுவதாகத் தெரிவித்திருக்கிறார்கள்

02

## எல்லாவல மேதானந்த தேரர் போல் மதி கெட்டவர்களே செயலணியில்!

### கடுமையாகச் சாடுகின்றார் விக்கி



யாழ்ப்பாணம், ஜூலை 12

"புத்தர் பிறப்பதற்கு முன்பிருந்தே, இலங்கையில் இருந்து வந்த சிவலிங்கத் தலங்கள். இராமாய ணம் பற்றிக் கூறி இராமாயணத்துடன் தொடர்புடைய இடங்களைப்

02

## விருப்பு இலக்கங்களுடன் நடமாடுவோர் கைதாவர்

கொழும்பு, ஜூலை 12

வேட்பாளர்களின் பெயர், விருப்பு இலக்கங்கள் அடங்கிய மேற்சட்டைகள், தொப்பிகள் மற்றும் முகக்கவசங்களை அணிந்து கொண்டு பொது இடங்களுக்குச் செல்வோரையும் வீடுவீடாகச் சென்று பிரசாரங்களில் ஈடுபடுவோரையும்

02

## கொரோனா நிலவர அறிக்கை

| தொற்றாளர் | புதிய தொற்றாளர் | சிகிச்சை பெறுவோர் | சந்தேகநபர்கள் | குணமடைந்தோர் |
|---|---|---|---|---|
| 2,459 | 05 | 468 | 65 | 1,980 |

இறப்பு 11

மூலம் : சுகாதார மேம்பாட்டு பணியகம்

### எல்லாவல...

பார்க்க வாருங்கள் என்று மத்திய அரசு சுற்றுலாப் பயணிகளைக் கூவி அழைக்கின்றது. தேரரோ நேற்று வந்த புத்த விகாரையின் இடத்திலேயே கோணேஸ்வரம் பின்னர் கட்டப்பட்டது என்கின்றார். வேண்டுமென்றே சிங்கள பௌத்த விகாரையின் இடத்தில் திருக்கோணேஸ்வரம் கட்டப்பட்டது என்று கூறி முழுப் பூசணிக்காயைச் சோற்றில் புதைக்கப் பார்க்கின்றார்."

- இப்படிச் சாடியுள்ளார் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் க.வி.விக்னேஸ்வரன்.

மதிப்புக்குரிய தேரர் போன்ற மதி கெட்டவர்களே இந்த செயலணியில் இருந்து இராணுவ உதவியுடன் கிழக்கு மாகாணத்தின் தலைவிதியை மாற்றப் போகின்றார்கள் என்று தெரிகின்றது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்-

தொல்பொருள் மரபுரிமைகளைப் பாதுகாக்கும் ஜனாதிபதி செயலணி எதற்காக நியமிக்கப்பட்டுள்ளதெனக் கூறாமல் கூறிவிட்டார் மரியாதைக்குரிய மேதானந்த தேரர்.

தமிழ் மற்றும் முஸ்லிம் சரித்திரவியலாளர்களைக் கொண்டிராத இந்தச் செயலணி பெரும்பான்மையர் தமிழ் மொழியைப் பேசும் கிழக்கு மாகாணத்திற்கு எதற்காக நியமிக்கப்பட்டுள்ளது என்றால் கிழக்கை சிங்கள பௌத்த மாநிலம் என்று அடையாளம் காட்டவே என்பது தேரரின் கூற்றிலிருந்து புலனாகின்றது.

சுபமல் குமாரயா என்ற சிங்கள இளவரசர் என்று செண்பகப் பெருமாள் என்ற தமிழரை அழைக்கின்றார் எமது தொல்லியலாளத் தேரர். செண்பகப் பெருமாள் என்பவர் தமிழர். செண்பகப் பெருமாள் என்ற கிழக்கிலங்கைத் தமிழ் மகனின் தந்தையான மாணிக்கத் தலைவன் என்ற கரையார் குலத் தலைவன் இறந்த பின் ஆறாம் பராக்கிரமபாகுவால் செண்பகப் பெருமாள் தத்தெடுக்கப்பட்டான். அந்தத் தமிழ் மகனின் பெயரே சபுமல்குமாரயா என்று மாற்றப்பட்டது.

அக் காலகட்டத்தில் இப்போது போல் தமிழ் சிங்கள உறவுகள் கூர்மை அடைந்திருந்திருக்கவில்லை.

ஆகவே அந்தத்தமிழ் மகனைச் சிங்கள இளவரசர் என்று தேரரால் அடையாளம் காட்டப்பட்டுள்ளமை பிழையான தகவலைத் தருவதாய் உள்ளது. உண்மையை மறைத்து ஏதோ சிங்களவர் ஒருவர் சென்று நல்லூரை ஆண்டார் என்று சிங்களவர் புராணத்தைப் பாடவேண்டிய அவசியம் என்ன? இது சிங்கள மக்களை ஏமாற்றும் ஒரு கபட நாடகம் அல்லவா?

அடுத்து தேரர் திருக்கோணேஸ்வரம் பற்றிப் பிழையான தகவல்களைப் பரப்பப் பார்க்கின்றார். திருக்கோணேஸ்வரம் பஞ்ச ஈஸ்வரங்களில் ஒன்று. புத்தர் காலத்திற்கு முன்பிருந்தே பஞ்ச ஈஸ்வரங்கள் இந்த நாட்டில் இருந்து வந்துள்ளன. நகுலேஸ்வரம் (கீரிமலை), தொண்டீஸ்வரம் (தற்போது மாத்தறையில் னுழனெசய என்ற இடத்தில் இருக்கும் விஷ்ணு ஆலயம் இருந்த இடத்தில் இச்சிவஸ்தலம் இருந்தது. தொண்டீஸ்வரத்திற்குத் தேனாவரம் என்ற பெயரும் உண்டு) முன்னீஸ்வரம் (சிலாபத்தில் உள்ளது) மற்றும் திருக்கேதீஸ்வரம் (மன்னாரில் உள்ளது) ஆகியவையே மற்றைய ஈஸ்வரங்கள்.

இவை சரித்திர காலத்திற்கு முன்பிருந்தே, புத்தர் பிறப்பதற்கு முன்பிருந்தே, இலங்கையில் இருந்து வந்த சிவலிங்கத் தலங்கள். இராமாயணம் பற்றிக் கூறி இராமாயணத்துடன் தொடர்புடைய இடங்களைப் பார்க்க வாருங்கள் என்று மத்திய அரசாங்கம் சுற்றுலாப் பயணிகளைக் கூவி அழைக்கின்றது. தேரரோ நேற்று வந்த புத்த விகாரையின் இடத்திலேயே கோணேஸ்வரம் பின்னர் கட்டப்பட்டது என்கின்றார். வேண்டுமென்றே சிங்கள பௌத்த விகாரையின் இடத்தில் திருக்கோணேஸ்வரம் கட்டப்பட்டது என்று கூறி முழுப் பூசணிக்காயைச் சோற்றில் புதைக்கப் பார்க்கின்றார்.

இவர் தமது சரித்திரத்தையும் தொல்லியலையும் எமது தமிழ்ப் பேராசிரியர்களிடம் கற்றல் நன்று. கிணற்றில் உள்ள மண்டுகத்திற்கு கிணறு தான் உலகம். அதைப் பொறுத்த வரையில் அதற்கப்பால் எதுவுமே இல்லை. இருக்கவும் முடியாது!

இவரின் இந்த இரு கூற்றுகளில் இருந்தே ஜனாதிபதி செயலணியின் கரவான எண்ணங்கள் வெளி வந்துள்ளன. மதிப்புக்குரிய தேரர் போன்ற மதி கெட்டவர்களே இந்த செயலணியில் இருந்து இராணுவ உதவியுடன் கிழக்கு மாகாணத்தின் தலைவிதியை மாற்றப் போகின்றார்கள் என்று தெரிகின்றது. அவர்களின் சூழ்ச்சி பலித்தால் இலங்கை ஒரு சிங்கள பௌத்த நாடு என்று பெயர் பெற்றுவிடும் அதைப் பின்னர் வந்த தமிழர்கள் ஆக்கிரமித்தார்கள் என்ற பொய்யான கூற்றை உலகம் பூராகவும் ஏற்றுக் கொள்ளச் செய்துவிடுவார்கள். எமது தமிழ் சரித்திர மற்றும் தொல்லியல் ஆசிரியர்கள், பேராசிரியர்கள் உண்மையை உரக்கக் கூற முன்வர வேண்டும் - எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### விருப்பு...

கைது செய்யுமாறு தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு பொலிஸாருக்கு ஆலோசனை வழங்கியுள்ளது.

இதேவேளை, அறிவிக்கப்பட்டுள்ள தினத்தில் தபால் மூல வாக்களிப்பில் ஈடுபடுமாறு அனைத்து தபால் மூல வாக்காளர்களிடமும் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு கோரிக்கை விடுத்துள்ளது.

இம்முறை பொதுத்தேர்தலில் தபால் மூலம் வாக்களிப்பதற்கு 7,05,085 பேர் தகுதி பெற்றுள்ளனர்.

### கந்தக்காட்டில்...

எனவும் தெரிவிக்கப்பட்டது.

இவர்கள் அனைவரும் கந்தகாடு புனர்வாழ்வு மத்திய நிலையத்தில் கொரோனா தொற்றுக்கு உள்ளானவர்களுடன் நெருங்கிய தொடர்பில் இருந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இவர்களுடன் தொடர்புடையவர்கள் என்ற அடிப்படையில் சுமார் 400 இற்கும் மேற்பட்டோர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் எனக் கூறப்படுகின்றது.

### மொறட்டுவையில்...

பொலிஸார் மூவர் திடீர் வீதித் தடைகளை ஏற்படுத்தி சோதனையில் ஈடுபட்டுள்ளனர்.

இதன்போது ஓட்டோ ஒன்றைச் சோதனைக்கு உட்படுத்தியபோது, அதில் இருந்தவர்களுடன் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் முரண்பாடாக மாறியுள்ள தாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்போது அந்த நபர் பொலிஸாரின் கடமைக்கு இடையூறு ஏற்படுத்தியதை யடுத்து, பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

இதன்போதே அந்த நபர் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. சம்பவத்தையடுத்து பொலிஸ் அதிகாரிகளை அந்தப் பிரதேச மக்கள் சுற்றிவளைத்ததையடுத்து அங்கு பதற்ற நிலையேற்பட்டது.

இதனை அடுத்து அந்தப் பிரதேசத்தில் விசேட அதிரடிப்படையினர் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மொட்டு கட்சி ஆதரவாளர் கிணற்றில் சடலமாக மீட்பு!

வவுனியா- சுந்தரபுரம் பகுதியில் பொதுஜன பெரமுன ஆதரவாளர் ஒருவர் நேற்று முன் தினம் இரவு 9.20 மணியளவில் கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சுந்தரபுரம் பகுதியில் இடம்பெற்ற சடங்கு நிகழ்வு ஒன்றில் அந்த நபர் கலந்து கொண்டுள்ளார். இரவு 9.00 மணியளவில் அவரைக் காணவில்லை என்று தேடியபோது சடங்கு இடம்பெற்ற வீட்டில் காணப்படும் கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார். சடலத்தை மீட்டெடுத்த அயலவர்கள் வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றனர்.

சுந்தரபுரம் பகுதியைச் சேர்ந்த பொதுஜன பெரமுன கட்சியின் வேட்பாளர் ஜனக நந்தகுமாரவின் ஆதரவாளரான 34 வயதுடைய நித்தியானந்தம் என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

தலையின் பின் பகுதியிருந்து இரத்தம் வழிந்துள்ளமையால் கொலையாக இருக்கலாம் என உயிரிழந்த நபரின் உறவினர்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

### தேர்தலின்...

எனத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்னென்ன விடயங்களை எடுக்கின்றதோ அந்த விடயங்களுக்கு விக்னேஸ்வரன் ஒத்துழைப்பு வழங்கி இணைந்து செயற்படுவார் என்று எழுத்து மூலமாக பகிரங்கமாகவே கூறிவருகிறார் எனவும் அவர் குறிப்பிட்டார்.

வவுனியாவில் நேற்று கட்சியின் தேர்தல் பிரசார அலுவலகத்தை திறந்துவைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்-

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலானது தமிழ் மக்களுக்கு திருப்புமுனையான ஒரு தேர்தலாகும். திருப்புமுனையான தேர்தல் என்றவுடன் எமது தலைவிதியில் முன்னேற்றத்தை ஏற்படுத்தக்கூடியது என்று சிலர் நினைக்கலாம். ஆனால் அவ்வாறான ஒரு தேர்தல் அல்ல.

தமிழ் மக்கள், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கு வாக்களிக்காமல் வேறு எந்தத் தரப்புக்காவது வாக்களித்தால் சரித்திரத்தில் முதன்முறையாக நாங்களாகவே விரும்பி ஒற்றையாட்சி அரசமைப்பை ஏற்றுக்கொள்வதற்குச் சமமானதாகும்.

நாடாளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டபோது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோட்டபாய ராஜபக்ஷவுக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மையை வழங்குவதற்குத் தயாராக இருப்பதாக பகிரங்கமாக அறிவித்திருந்தது. அத்துடன் தேர்தலுக்கு பின்னர் யார் ஆட்சிக்கு வந்தாலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், அந்த அரசுடன் இணைந்து அமைச்சுப் பதவியையும் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருப்பதாக அறிவித்திருக்கிறார்கள்.

தற்போது, தமிழ் மக்களின் உரிமையை முற்றுமுழுதாக அழிப்பதற்கு செயற்பட்டு தமிழ் மக்களை இனப்படுகொலை செய்த குற்றத்தில் முதலாவது குற்றவாளியாக இருக்கின்ற கோட்டாபய மற்றும் மஹிந்த அணி இன்று மூன்றில் இரண்டு பெரும்பான்மையை தெற்கிலே பெறக்கூடிய ஆதரவைப் பெற்றிருக்கின்றது.

இச்சந்தர்ப்பத்தில் 99 சதவீதம் ஆட்சி அமைப்பதற்கான சந்தர்ப்பம் இருக்கின்ற நிலையிலே அந்தத் தரப்புடன் இணைந்து மூன்றில் இரண்டு பெரும்பான்மையை வழங்குவதுடன் அரசுடன் இணைந்து அமைச்சுப் பதவியைப் பெறவிருப்பதாகவும் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள்.

இதேவேளை, இன்று மாற்று அணி என்று கூறிக்கொண்டு இருக்கின்ற விக்னேஸ்வரன் கட்சிகூட தேர்தல் முடிந்த பின்பு நாடாளுமன்றத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து செயற்படுதாக தெரிவித்திருக்கிறார்கள்.

தமிழ் மக்களுக்கு நடந்த இனப் படுகொலைக்கு நேர்மையான நீதி கோரி சர்வதேச குற்றவியல் விசாரணையை முன்னெடுப்பதற்கான முயற்சியை எடுப்பதாக இருந்தால் ஈழத் தமிழருக்கு இருக்கின்ற ஒரேயொரு தெரிவு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி என்பதை எமது மக்கள் விளங்கிக்கொள்ள வேண்டும்.

இத்தேர்தலில் எமது மக்கள் மீண்டும் ஒருமுறை பிழை விட்டால் அந்தப் பிழை நிரந்தரமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதையும் மக்கள் விளங்கிக்கொள்ள வேண்டும்-என்றார்.

### இதுவரை...

தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ மத்திய நிலையத்துக்கும் கிடைத்துள்ளதாக அறிக்கை ஒன்றை வெளியிட்டு ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

### வெளிநாடுகளில்...

மேலதிக செயலாளர் அட்மிரல் ஜயநாத் கொலம்பகே தெரிவித்துள்ளார்.

முன்னதாக, தற்போதைய நிலைமையின் அடிப்படையில் தனிமைப்படுத்தல் முகாம்களில் போதிய அளவு வசதி இல்லாத காரணத்தால் இவ்வாறு மட்டுப்படுத்தப்படவுள்ளதாக இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

### விமலேஸ்வரியிடம்...

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன்.

கரவெட்டியில் நடைபெற்ற பரப்புரைக் கூட்டத்தில் கருத்துரைக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பதின்நான்கு நாட்களுக்குள் அவரிடம் இருந்து பதில் கிடைக்கப் பெறாத பட்சத்தில் உயர்நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

### அமெரிக்க...

தற்போது அரசு சோபா ஒப்பந்தத்திலும் கைச்சாத்திடுவதற்கான பேச்சுக்களை முன்னெடுத்து வருவதாகவும், அந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டால் அமெரிக்க இராணுவம் சீருடையுடன் இலங்கைக்குள் நுழைய முடியுமெனவும் அவர் குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

அமெரிக்க இராணுவம் நாட்டுக்குள் கொண்டு வரும் எந்தவொரு பொருளையும் சோதனையிடும் அதிகாரம் இலங்கைக்கு கிடைக்காது.

அத்தோடு, இலங்கையின் சட்டத்துக்குப் பணிய வேண்டிய அவசியம் அவர்களுக்கு இருக்காது. அந்த சோபா ஒப்பந்தத்தில் கைசாத்திடுவதற்கான இலஞ்சமாகவே எம்.சி.சி ஒப்பந்தம் கைசாத்திடப்பட உள்ளது.

அதே இலஞ்சத்தை நல்லாட்சி அரசும் பெற முயற்சித்தது. நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் அந்த ஒப்பத்தில் அரசு கைசாத்திடும்- என்றார்.

ஈழநாடு
Eelanadu — ඊළනාඩු
12.07.2020 ஞாயிற்றுக்கிழமை

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

**gmail:- eelanaduweekly@gmail.com**

**தொலைபேசி : 021 492 7805**

# சுமந்திரன் வேண்டாம் இந்தியா சொன்னதா?

சில தினங்களுக்கு முன்னர் தமிழ் அரசுக் கட்சியின் வன்னித் தேர்தல் மாவட்ட வேட்பாளர் மருத்துவர் சத்தியலிங்கம், தமிழர் தாயகத்தின் தனித்துவத்தை பாதுகாக்க, இந்தியா தலையீடு செய்ய வேண்டுமென்று கூறியிருந்தார். இதற்கு சில தினங்களுக்கு முன்னர் சம்பந்தன் திருகோணமலையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றின்போது, இந்தியா தங்களுக்கு பின்னாலிருப்பதாக தெரிவித்திருந்தார். பொதுவாக தேர்தல் காலத்தில் தமிழ் அரசியல் வாதிகளுக்கு இந்தியா நினைவுக்கு வருவது ஆச்சரியமான ஒன்றல்ல. கடந்த ஆட்சிக் காலத்தில் இந்தியா என்றொரு நாடு இருப்பதையே சம்பந்தன் கிட்டத்தட்ட மறந்திருந்தார். எதிர்கட்சித் தலைவராக இருந்த காலத்தில் புதுடிலிக்குச் செல்வதை அவர் முற்றிலும் தவிர்த்திருந்தார்.

ஆனால் சத்தியலிங்கத்தின் இந்தியா தொடர்பான கருத்தைத் தொடர்ந்து, இலங்கை சிவசேனை அமைப்பின் தலைவர் மற வன்புலவு சச்சிதானந்தம் வெளியிட்டிருக்கும் ஒரு தகவல் அதிக கவனத்தை பெற்றிருக்கின்றது. அதாவது, பல மாதங்களுக்கு முன்னர் தமிழ் அரசு கட்சியின் குழுவொன்று புதுடில்லிக்கும் சென்னைக்கும் சென்று, வெளிவிவகார அமைச்சின் இணை அமைச்சரையும் தமிழ்நாட்டு பி.ஜே.பி. தலைவர்களையும் சந்தித்ததாகவும் இதன் போது, ‘உங்களோடு சுமந்திரனை வைத்துக் கொண்டு இங்கு வராதீர்கள்’ என்று அவர்கள் தமிழ் அரசு கட்சிப் பிரதிநிதிகளிடம் கூறியதாகவும் சச்சிதானந்தம் தெரிவித்திருக்கின்றார்.

இந்தச் சந்திப்பில் தமிழ் அரசு கட்சியின் சார்பில் கனடா குகதாசன் மற்றும் சத்தியலிங்கம் ஆகியோர் கலந்துகொண்டதாகவும் சச்சிதானந்தன் தெரிவித்திருக்கின்றார். குகதாசன் சம்பந்தனோடு இணைந்து திருகோணமலையில் போட்டியிடுகின்றார். மேற்கு சார்பு முன்னணி, தமிழ் புலம்பெயர் அமைப்பான கனடிய தமிழ் காங்கிரஸின் ஆதரவைப் பெற்றவரான குகதாசன், மிகவும் குறுகிய காலத்தில் திருகோணமலை தமிழ் அரசியலில் தனக்கென்று ஓர் இடத்தைப் பெற்றிருக்கின்றார். குகதாசன் மற்றும் சத்தியலிங்கம் ஆகியோர் மேற்படி சந்திப்புக்களில் ஈடுபட்டதை உறுதிப்படுத்தும் வகையிலான புகைப்பட ஆதாரத்தையும் சச்சிதானந்தம் வெளியிட்டிருக்கின்றார்.

சிவசேனை சச்சிதானந்தம் இந்திய மட்டத்தில் பரவலான தொடர்புகள் உள்ளவர். குறிப்பாக தற்போது மத்தியில் ஆட்சியிலுள்ள பி.ஜே.பி. தலைவர்களுடன் தொடர்புகளை பேணுபவர். இது தமிழ் அரசியல் வட்டாரத்தில் நன்கறியப்பட்ட செய்தி. ஆனால் இந்தியத் தலைவர்களுடனான சந்திப்பு ஒன்றின் போது, சுமந்திரன் தொடர்பில் அவ்வாறு தெரிவிக்கப்பட்டிருக்குமானால், அது மிகவும் சிக்கலான விடயமாகும். ஆனால் இந்தக் கூட்டம் இடம்பெற்று பல மாதங்களின் பின்னரும் கூட, இது தொடர்பில் தமிழ் அரசு கட்சியினர் எதனையும் வெளியிடவில்லை. இப்போது சச்சிதானந்தத்தின் கூற்றை ஒன்றில், தமிழ் அரசு கட்சியின் தலைமை மறுக்க வேண்டும், அத்தோடு, அவரது கருத்தை சவாலுக்கு உட்படுத்த வேண்டும். அல்லது, அங்கு என்ன நடந்தது என்பதை மக்களுக்குச் சொல்ல வேண்டும். இந்தக் கூட்டத்தில் பங்குகொண்ட சத்தியலிங்கம் மற்றும் குகதாசன் ஆகியோர் உண்மையிலேயே அவ்வாறு கூறப்பட்டிருந்தால் அதனை பகிரங்கப்படுத்த வேண்டும். மக்கள் உண்மைகளை அறிய வேண்டியது கட்டாயமான ஒன்று.

# தமிழருக்கான தீர்வைத் தர வைக்க சர்வதேசத்தால் மட்டுமே முடியும்

## வடக்கு அவைத்தலைவர் சிவஞானம்



*யாழ்ப்பாணம், ஜூலை 12*

நாங்கள் பலமாக இருந்தால்தான் அரசியல் தீர்வை இந்தியா உள்ளிட்ட சர்வதேசத்தைக் கேட்கலாம். அவர்கள் மூலம் பெற்றுக்கொண்டாலும், அதற்கு ஆட்சியில் உள்ள அரசாங்கம் சம்மதிக்க வேண்டும். எதிர்க்கட்சியையும் சம்மதிக்கச் செய்ய வேண்டும். இதனை செய்ய சர்வதேசத்தாலேயேயே முடியும் - என்று

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மூத்த துணைத் தலைவரும் வடக்கு மாகாண அவைத் தலைவருமான சீ.வீ.கே. சிவஞானம் தெரிவித்துள்ளார்.

தொலைக்காட்சி ஒன்றுக்கு நேற்று முன்தினம் அளித்த நேர்காணலிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அரசியல் தீர்வு ஒன்றை முன் வைப்பதாக பாசாங்கு செய்வார்கள் என்பதுதான் கடந்த 5 வருட கால அனுபவம். அதற்கு முன்னரும் சொன்னார்கள்தான். கடைசியாக கொஞ்சம் படிமுறைக்கு மேலாக வந்தது. அதை நாங்கள் ஒத்துக் கொள்ள வேண்டும். நேற்றைய இன்னொரு பேட்டியில் நான் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். மொழி சம்பந்தமாக இன்றைக்கு சிங்களம் மட்டும் சட்டமில்லை. தமிழும் சிங்களமும் தேசிய மொழிகள் என்று வந்துவிட்டதுதானே உத்தியோகபூர்வ மொழி என்று வந்துவிட்டதுதானே. மாற்றம் நடைபெற்றதுதானே அதேபோல் 1978 ஆம் ஆண்டு அரசமைப்பிலே பௌத்தத்திற்கு முன்னுரிமை என்ற வசனம் இருக்கிறது. இன்றும் அதுதான் இருக்கிறது. ஆனால், முக்கியமான விடயம் நடந்தது. இந்த முன்மொழிவிலே என்ன நடந்தது என்றால் ஏனைய மதங்களுடைய உரிமை இப்பொழுது இந்த மதங்கள் என்ற ஏற்பாட்டுக்குள்ளே உள்ளடக்கப்பட்டுள்ளது. இப்பொழுது அது அடிப்படை உரிமைகளுக்குள் கொண்டு போய் செருகப்பட்டுள்ளது.

ஆனால், எங்களில் சிலர் இது ஒரு மத சார்பற்ற நாடு என்கின்றார்கள். இது எல்லாம் அர்த்தமில்லாமல் - யதார்த்தமில்லாமல் நாங்கள் கதைப்பது. இந்தியா மத சார்பு இல்லாத நாடாக இருக்கிறது. ஆனால் பாரதீய ஜனாதாக் கட்சி ஆட்சிக்கு வந்த பின்னர் அங்கு அப்படி நடக்கிறதா? இல்லை. நடைமுறை அப்படி. 74 வீதமான பௌத்தர்கள் மத சார்பற்ற நாடாக இந்த நாட்டை மாற்ற முடியாது என்று மறுக்கின்றார்கள். எங்களுடைய மதங்களுக்கான ஏற்பாட்டை மதங்களுக்குள் கொண்டு வந்தது முன்னேற்றம். ஆனால், அது திருப்தி இல்லை. இது மதசார்பற்றதல்ல. இதைக் கேட்கிறவர்களுக்கு நான் பொதுவாகச் சொல்கிறேன். தந்தை செல்வாவையே ஏமாற்றியவர்கள் என்பது என்னுடைய கருத்து. இது புதியவர்களுக்குத் தெரியாது.

1965 ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சியின் டட்லி சேனநாயக்காவுடன் உடன்படிக்கை செய்து திருச்செல்வத்தை அமைச்சராக்கினார்கள். பின்னர் 1968 இல் பதவி விலகி யாழ்ப்பாணம் வந்தனர். முதலில் என்னுடைய ஊரான கல்வியங்காட்டில் முதலாவது பொதுக் கூட்டம் நடந்தது. அப்பொழுது மக்கள் மத்தியில் சரியான கொந்தளிப்பு நிலை காணப்பட்டது. தந்தை செல்வநாயகம் பேச எழும்பினார். அவர் பெரிதாக ஒன்றும் பேசவில்லை. நாங்கள் அவர்களை நம்பினோம் - ஏமாற்றி விட்டார்கள். ஏமாந்து போனோம் இவ்வளவுதான் சொன்னார்.

அந்த சபையில் ஒரு சலனம், சத்தம் இல்லை. அமைதியாக இருந்தது. தந்தை அவ்வளவுதான் சொன்னார். ஏன் நான் இதைசொல்கிறேன் என்றால் அவர் உண்மையைச் சொன்னார்.

சர்வதேசத்தையும் குறிப்பாக இந்தியாவையும் இணைத்து, இந்தியா இதில் கொண்டி ருக்கிற தெளிவான வகிபாகத்தை பலப்படுத்தி செயற்படுத்த வேண்டிய தேவை இருக்கிறது. இந்தியா - இலங்கை ஒப்பந்தத்தை அதை உறுதிப்படுத்தியது. இந்திய அரசாங்கம் ஒரு அன்டரைட்டர். அந்த ஒப்பந்தத்திலே இருக்கிறது.

நாங்கள் பலமாக நின்று கொண்டு இந்தியாவையும் கேட்லாம். நீங்கள் பிரிந்து - ஒற்றை, இரட்டை பிடித்துக் கொண்டு நின்றால் இந்தியாவும் அதில் வர வாய்ப்பு இல்லை. இதில் இந்தியாவை குறை சொல்லக்கூடாது. நாங்கள் பலமாக நின்றுகொண்டு மக்கள் எங்களை தெரிவு செய்வார்களோயானால் இந்தியாவைக்கூட வலுவாக நாங்கள் கேட்கலாம். நாங்கள் பலமாக நிற்கிறோம். நீங்கள் எங்கள் பிரச்னையில் தலையிடுங்கள் என்று சர்வதேசத்தைக் கேட்கலாம். அதன் மூலம் நாங்கள் தீர்வைப் பெற்றுக் கொள்ளலாம். ஆனால் எந்த விடயமாக இருந்தாலும் இறுதி முடிவு இந்நாட்டிலே இருக்கின்ற, பதவியில் இருக்கின்ற அரசாங்கம்தான் செய்ய வேண்டும். அதை எதிர்க்கட்சிகளும் ஆதரிக்கக்கூடிய நிலையை உருவாக்க வேண்டும். அது சர்வதேசத்தாலேதான் முடியும் - என்றார்.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



செய்திகள்

# நாட்டை மீண்டும் முடக்கும் எண்ணம் எதுவுமே இல்லை

## பொலிஸ் பேச்சாளர் கூறுகிறார்



கொழும்பு, ஜூலை 12

நாட்டை மீண்டும் முடக்கும் எண்ணம் ஏதும் இல்லை என்று பொலிஸ் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மீண்டும் கொரோனா தொற்று அதிகரித்துள்ள நிலையில், நாடு மீண்டும் முடக்கப்படுமா என்று எழுப்பப்பட்டிருந்த கேள்விக்குப் பதிலளித்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

கொரோனா தொற்று சமூகப் பரவலாக மாறவில்லை என்று சுகாதார அதிகாரிகள் கூறியுள்ளனர் என்றும் எனவே, நாட்டை மீண்டும் முடக்கும் எண்ணம் ஏதும் இல்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

சமூகத் தொற்றாக மாறாவிட்டாலும், கொரானா அச்சுறுத்தல் இன்னமும் இருக்கின்றது என்றும் பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

எனவே சுகாதார விதிமுறைகளைக் கடைப்பிடித்து, கொரோனா தொற்றைக் கட்டுப்படுத்தப் பொதுமக்கள் ஒத்துழைக்கவேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார்.

# போதைப்பொருள் வர்த்தகம் குறித்து தகவல் தருமாறு கோட்டா கோரிக்கை

கொழும்பு, ஜூலை 12

கிராமப் புறங்களில் இடம் பெறும் போதைப்பொருள் வர்த்தகம் குறித்து தகவல் வழங்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

மாத்தளை மாவட்டத்தின் பல பகுதிகளுக்கும் விஜயம் செய்த ஜனாதிபதி ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் வேட்பாளர்களின் வெற்றியை உறுதி செய்வதற்கான மக்கள் சந்திப்புகளில் பங்கேற்றார்.

பொதுமக்களுடன் கலந்துரையாடல்களை மேற்கொண்ட ஜனாதிபதியிடம் நாட்டில் காணப்படும் போதைப் பொருள் வர்த்தகம் மற்றும் பாவனையை ஒழிக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்தனர்.

கிராமப் புறங்களிலிருந்து போதையை ஒழிக்க அங்கு இடம்பெறும் சட்டவிரோதச் செயற்பாடுகள் தொடர்பாக அறியத்தருமாறு ஜனாதிபதி வலியுறுத்தினார்.

அத்தோடு பொதுமக்கள் தாம் எதிர்நோக்கியுள்ள பிரச்னைகளையும் ஜனாதிபதியிடம் தெரிவித்தனர். குறிப்பாக வெங்காயம் இறக்குமதி செய்யப்படுவதால் தாம் பாதிக்கப்பட் டுள்ளதாகப் பெரிய வெங்காய பயிர்ச் செய்கையாளர்கள் ஜனாதிபதியிடம் தெரிவித்தனர்.



அதற்கு பதிலளித்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, அறுவடை காலத்தில் வெங்காய இறக்குமதிக்கு தடை விதித்து, உள்ளூர் விவசாயிகளின் உற்பத்திக்கு உயர்ந்தபட்ச விலையைப் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கப்படுமெனக் குறிப் பிட்டார்.

இதேவேளை, பொதுமக்கள் முன்வைத்த பல்வேறு பிரச்சினைகளுக்கும் தீர்வை வழங்க உரிய நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

# தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்ற கோட்டாபயவின் அரசினால் முடியாது!

## அடித்துச் சொல்கிறார் சஜித் பிரேமதாஸ

கொழும்பு, ஜூலை 12

தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்குத் தற்போதைய அரசால் ஒரு போதும் இயலாது என ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

குருநாகல் பகுதியில் இடம் பெற்ற தேர்தல் பிரசார நடவடிக்கையில் கலந்து கொண்டு கருத்துரைக்கையிலேயே ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்-

தற்போதைய ஆட்சியில் பொருளாதாரம் பாரிய அளவில் வீழ்ச்சியடைந்துள்ளது. தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு தற்போதைய அரசால் ஒரு போதும் இயலாது.



மக்களை முட்டாள்களாக்கும் நடவடிக்கையையே தற்போதைய அரசு மேற்கொண்டு வருகின்றது. மக்களை ஏமாற்றுகின்றனர். மக்களை நெருக்கடிக்குள்ளாக்குகின்றனர்.

உலகளாவிய ரீதியில் எண்ணெய் விலை குறைவடைந்துள்ளது. பல்வேறு நாடுகளும் எண்ணெய் விலையைக் குறைத்துள்ளன. ஆனால் எமது நாட்டில் மாத்திரமே 12 மாதங்களுக்கு எண்ணெய் விலை குறைவடைய மாட்டாது என அமைச்சரவைப் பத்திரமூடாக அனுமதி பெற்றுக்கொள்ளப் பட்டுள்ளது.

எனவே எதிர்வரும் பொதுத் தேர்தலில் வெற்றி பெற்று புதிய அரசு ஒன்றை அமைத்து 24 மணிநேரத்துக்குள் எண்ணெய் விலையை குறைப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன் என்பதை நான் இங்கு தெரிவித்துக்கொள்கின்றேன் - என்றார்.

# வாக்காளர் அட்டைகள் விநியோகம் ஆரம்பம்

கொழும்பு, ஜூலை 12

2020 பொதுத் தேர்தலுக்கான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை ஏற்றுக்கொள்ளும் நடவடிக்கை நேற்று முதல் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகத் தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய நேற்று முதல் நாளை வரை மூன்று நாட்களுக்கு உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை ஏற்றுக் கொள்ளும் நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளதாக பிரதித் தபால் மா அதிபர் ராஜித ரணசிங்க தெரிவித்துள்ளர்.

மாவட்ட செயலகங்கள் ஊடாக குறித்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை விநியோகிக்கும் நடவடிக்கை எதிர்வரும் 29 ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ள நிலையில் வாக்காளர் அட்டைகள் கிடைக்கப்பெறாத வாக்காளர்கள், அருகில் உள்ள தபாலகங்களில் தங்களுக்குரிய வாக்காளர் அட்டைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இதனிடையே பொதுத் தேர்தலுக்கான தபால் மூல வாக்குப்பதிவு நடவடிக்கைகள் எதிர்வரும் 14 ஆம், 15 ஆம், 16 ஆம் மற்றும் 17 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. அரச பணியாளர்களுக்கான தபால் மூல வாக்குப்பதிவு எதிர்வரும் 14 ஆம்,15 ஆம் திகதிகளில் முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்த நாட்களில் வாக்களிப்பில் பங்கேற்க முடியாத அரச பணியாளர்கள் எதிர்வரும் 20ஆம், 21 ஆம் திகதிகளில் வாக்களிப்பை மேற்கொள்ள முடியும் எனவும் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

# பொய்யான தகவல்களை பரப்பினால் நடவடிக்கை

கொழும்பு, ஜூலை 12

போலிச் செய்திகளைப் பரப்புவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸ் பேச்சாளர் ஜாலிய சேனாரத்ன எச்சரிக்கை விடுத்துள்ளார்.

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் கொரோனா தொற்றாளர்கள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளனர் எனப் பொய்யான செய்திகள் பரப்பப்படுவதாகப் பொலிஸாருக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று பொலிஸ் பேச்சாளர் மேலும் கூறியுள்ளார்.

உறுதிப்படுத்தப்படாத அந்தச் செய்திகளை பொதுமக்கள் நம்ப வேண்டாம் என்றும் இவ்வாறான போலிச் செய்திகளைப் பரப்புவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.




# மக்களின் நடவடிக்கைகளை கண்காணித்தே கட்டுப்பாடு

கொழும்பு, ஜூலை 12

கொரோனா வைரஸ் உக்கிரமடைந்த காலப்பகுதியில் சமூகத்தில் விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளை மீண்டும் விதிப்பதா? இல்லையா? என்ற தீர்மானம் நாட்டு மக்களின் செயற்பாடுகளைக் கண்காணித்தே மேற்கொள்ளப் படுமெனப் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

அதனால் நாட்டு மக்கள் தொடர்ச்சியாக பாதுகாப்பாக இருக்க வேண்டியது அவசியமெனவும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

எவ்வாறாயினும், கொரோனா அச்சுறுத்தல் நாட்டிலிருந்து முழுமையாக மறைந்துவிடவில்லை எனத் தெரிவித்த அவர், கொரோனா வைரஸ் பரவிய ஆரம்ப காலத்தில் அதிலிருந்து பாதுகாப்பு பெறுவதற்காக காண்பித்த அக்கறையைத் தற்போது நாட்டு மக்கள் காண்பிப்பதாக தெரியவில்லை என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

செய்திகள்

# கருணாவைக் கைது செய்யுங்கள் நீதிமன்றில் 'ரிட்' மனு தாக்கல்

## கருத்து தந்த பாதிப்புக்கு ரூ. 10 இலட்சம் நட்டஈட்டுக்கும் கோரிக்கை

கொழும்பு, ஜூலை 12

கருணா என்றழைக்கப்படும் விநாயகமூர்த்தி முரளிதரனை உடனடியாகக் கைது செய்வதற்கு பதில் பொலிஸ் மா அதிபருக்கு கட்டளையிடுமாறு கோரி எழுத்தாணை மனுவொன்று ( ரிட் மனு) மேன்முறையீட்டு நீதிமன்றில் நேற்று தாக்கல் செய்யப்பட்டது.

கடந்த ஜூன் 25 ஆம் திகதி உயர் நீதிமன்றில் கருணா அம்மானின் கருத்துக்கு எதிராக அடிப்படை உரிமை மீறல் மனுவினை தாக்கல் செய்த, கடுவலை நகர சபையின் உறுப்பினரும் பகுதி நேர வகுப்பு ஆசிரியருமான போசெத் கலஹே பத்திரண குறித்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

ஒரே இரவில் இரண்டாயிரம் தொடக்கம் மூவாயிரம் இராணுவ உறுப்பினர்களைக் கொன்ற தாம், கொரோனா தொற்றை விட ஆபத்தானவர்




என கருணா வெளியிட்ட கருத்தை அடிப்படையாகக் கொண்டு இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சட்டத்தரணி ஜலித் விஜேசுந்தரவினால் தாக்கல் செய்யப்பட்ட இந்த மனுவின் பிரதிவாதிகளாக கருணா, சட்டமா அதிபர், பதில் பொலிஸ் மா அதிபர் ஆகியோர் பெயரிடப்பட்டுள்ளனர்.

தேர்தல் பிரசாரக் கூட்டத்தின் போது வெளியிடப்பட்ட அந்தக் கருத்தின் மூலம் அவர் சமூகக் கொலைக் குற்றவாளி என்பது உறுதியாகியுள்ளதாக மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அந்தக் கருத்தை ஒப்புதல் வாக்குமூலமாகக் கருதி அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முடியும் என மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சாட்சிகள் கட்டளைச் சட்டம், குற்றவியல் தண்டனைச் சட்டம், பயங்கரவாத தடை சட்டம் , சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச இணக்கப்பாட்டு சட்டத்தின் கீழ் அவருக்கு எதிராக உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு குறித்த ரிட் மனுவில் கோரப்பட்டுள்ளது. அத்துடன் கருணாவின் கருத்துக்கள் காரணமாக ஏற்பட்டுள்ள பாதிப்புக்கு 10 இலட்சம் ரூபா நட்ட ஈட்டையும் தமக்கு பெற்றுத் தருமாறும் குறித்த ரிட் மனுவில் கோரப்பட்டுள்ளது.

# கருணாவே அரசியல் வந்தேறி 46 வீதமான முஸ்லிம்களல்ல!

## அம்பாறையில் இனவாதம் கக்கும் ஹரீஸ்

அம்பாறை, ஜூலை 12

வரலாற்று கொலைகளை செய்த கருணா என்னை தோற்கடித்து முஸ்லிம் பிரதிநிதித்துவத்தை இல்லாமல் செய்ய தேர்தல் வியூகங்களை வகுத்துள்ளார் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதி தலைவரும் வேட்பாளருமான எச்.எம்.எம். ஹரீஸ் குற்றஞ் சாட்டினார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் ஹரீஸ் நேற்று செய்தியாளர் சந்திப்பு ஒன்றை நடத்தினார்.

இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும், தேர்தல் பிரசாரம் என்ற போர்வையில் கருணா தமிழ் - முஸ்லிம் மக்களிடையே பிளவுகளை ஏற்படுத்தும் வண்ணம் செயற்பட்டு வருகின்றார்.

அவரது பிரசாரத்தில் அண்மையில் முஸ்லிம்களை வந்தேறு குடிகள் என விளித்துக் கருத்துக்களை தெரிவித்திருந்தார். ஆனால், கருணாதான் அம்பாறை மாவட்டத்தின் அரசியல் வந்தேறி குடியாவார். 46 வீதம் வாழும் முஸ்லிம் மக்களின் அடையாளம் எமது அம்பாறை மாவட்டமாகும்.

இவர் போன்றவர்கள்தான் நேரடியான கொலைகளை செய்தது மாத்திரமன்றி வரலாற்று கொலைகளைச் செய்து கொண்டிருக்கின்றார்கள். பல இடங்களில் முஸ்லிம்களை இவர் தலைமையிலான புலிகளே கடந்த காலங்களில் கொன்றிருந்தார்கள். காத்தான்குடி, கல்முனை, அக்கரைப்பற்று, பொத்துவில்,



மூதூர் போன்ற பகுதிகளில் முஸ்லிம் மக்கள் கொன்று குவிக்கப்பட்டனர்.

கருணாவின் தேர்தல் வியூகம் என்பது கல்முனை தொகுதியில் என்னை தோற்கடிப்பது. இதன்மூலம் கல்முனை நகரத்தை கைப்பற்றலாம் என பகல் கனவு காண்கின்றார். கல்முனை நகர் பாதுகாக்கப்பட வேண்டும். எனவே, கோடீஸ்வரன், கருணா, வியாழேந்திரன் ஆகியோர் தோற்கடிக்கப்பட வேண்டும் - என்றார்.



# கடலுக்கடியில் அருங்காட்சியகம் திருமலையில் திறக்கப்பட்டது

திருகோணமலை, ஜூலை 12

திருகோணமலையில் கடலுக்கு அடியில் அமைக்கப்பட்ட அருங்காட்சியகம் கடற்படைத் தளபதி பியல் டி சில்வாவால் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

உள்ளூர் மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளை சென்டி பே கடற்கரை கவருவதால், அக்கடற்கரையை அண்டியதாக இந்த அருங்காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளதாக, கடற்படை ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

சுமார் 60 அடி ஆழத்தில் 150 அடி நீளத்தில் 85 அடி அகலத்தில் குறித்த அருங்காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த பகுதி பவளப்பாறைகள் உருவாகுவதை ஊக்குவிக்கும் என்பதோடு, மீன் வளத்தை அதிகரிக்கவும் எதிர்பார்க்கப்படுகிறது.

அத்துடன் தற்போது இப்பிரதேசத்தை அண்டிய பகுதியில் மீன் இனப்பெருக்கம் ஆரம்பமாகியுள்ள நிலையில், மிக விரைவில் சுற்றுலா பயணிகளுக்கு இப்பிரதேசத்தில் சுழியோடுவதற்கான வாய்ப்பு கிடைக்கும்.

ஆயினும், இப்பகுதியில் தற்போது மீன் பிடியில் ஈடுபடுவதை தவிர்க்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். எவ்வாறாயினும், மீன் இனப்பெருக்கப் பகுதி அபிவிருத்தி செய்யப்பட்டவுடன், மீனவர்களுக்கு உச்சபட்ச நன்மைகள் கிடைப்பதற்கான வாய்ப்புக் கிடைக்கும் எனவும், கடற்படை ஊடகப் பிரிவுதெரிவித்துள்ளது.

இப்பகுதியில் நீந்துபவர்களுக்கும் நீராடுபவர்களுக்கும் தனித்துவமானதொரு பார்வையிடும் அனுபவத்தை குறித்த அருங்காட்சியகம் வழங்கும் எனவும், கடற்படை ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

# பாராளுமன்றத் தேர்தல் தொடர்பில் கிழக்கில் 38 முறைப்பாடுகள் பதிவு

திருகோணமலை,ஜூலை 12

பாராளுமன்றத் தேர்தல் தொடர்பில் இதுவரை 38 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன என்று கிழக்கு மாகாண பிரதி தேர்தல் ஆணையாளர் எஸ்.சுதாகரன் தெரிவித்தார்.

தேர்தல் சட்டத்தை மீறல் மற்றும் முறைப்பாடுகளை 026 222 2352 என்ற தொலைபேசி இலக்கம் மூலம் அல்லது 0765318905 என்ற வட்ஸ்அப் ஃ வைபர் இலக்கங்கள ஊடாக பதிவு செய்ய முடியும்.

அத்துடன் 15,200 வாக்காளர்கள் அஞ்சல் வாக்காளர்களாக வாங்களிக்க தகுதிபெற்றுள்ளார்கள். எதிர்வரும் 13 ஆம் திகதி சுகாதாரத்துறையினரும் (சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக அலுவலர்கள்),14,15ம் திகதிகளில் ஏனைய அரச உத்தியோகத்தர்களும் 16,17 ம் திகதிகளில் மாவட்ட செயலகம், முப்படை மற்றும் பொலிஸ் திணைக்கள உத்தியோகத்தர்களும் அஞ்சல் வாக்குகளை பதிவு செய்ய முடியும் என்றும் பிரதி தேர்தல் ஆணையாளர் மேலும் தெரிவித்தார்.




# சட்டவிரோத மணல் அகழ்வு வவுணதீவில் ஐவர் கைது

மட்டக்களப்பு, ஜூலை 12

மட்டக்களப்பு - வந்தாறு மூலை சிவப்பு பாலத்தடி பிர தேசத்தில் சட்டவிரோதமாக மணல் அகழ்வில் ஈடுபட்ட ஐந்து பேர் வவுணதீவு விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடமிருந்து மணல் ஏற்றுவதற்குப் பயன்படுத்தப்பட்ட ஐந்து உழவு இயந்திரங்களும்கைப்பற்றப்பட்டன என்றும் அதிரடிப்படையினர் தெரிவித்தனர்.

சந்தேக நபர்கள் ஏறாவூர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்த உழவு இயந்திரங்கள் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப் பட்டுள்ளன.

இந்தப் பிரதேசத்தில் மணல் அகழ்வதற்கான அனுமதிப் பத்திரங்கள் இவர்களிடம் இருக்கவில்லையென குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

செய்திகள்

# 170 சிறை உத்தியோகத்தர்களுக்கு முடி திருத்திய கைதிக்கு கொரோனா

## சமூகத் தொற்று அதிகரிக்கும் அச்சம்

கொரோனா இரண்டாவது அலை குறித்து நாட்டு மக்கள் அஞ்சுகின்றனர். இந்நிலையில், வெலிக்கடைச் சிறையில் சிகை அலங்கார பிரிவில் பணியாற்றிய கைதியால் சமூகப் பரம்பல் அதிகரித்திருக்குமா என்று சந்தேகம் வெளியிடப்பட் டுள்ளது.

குறித்த கைதி சிறைச்சாலையில் பணியாற்றும் 170 சிறைச்சாலை உத்தியோகத்தர்களுக்கு சிகை அலங்காரப் பணி மேற்கொண்டார் என்று கூறப்படுகின்றது.

இந்த நிலையில், அவர்களை பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்துவதற்கு சிறைச்சாலை பொது சுகாதார பரிசோதகர்கள் தற்போது நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை, கொவிட்-19 தொற்றுறுதியான கந்தக்காடு புனர்வாழ்வு மையத்தில் ஆலோசகராக செயற்பட்ட 27 வயதுடைய பெண்ணுடன் சம்பந்தப்பட்டதாக அடையாளம் காணப்பட்டு சுயதனிமைப் படுத்தலுக்கு உட்படுத்தப்பட்ட 29 பேருக்கு இன்றைய தினம் பி.சி.ஆர். பரிசோதனை மேற் கொள்ளப்பட்டுள்ளது. அதன் முடிவுகள் நேற்று கிடைத்தன.

இதேநேரம், அவர்களுடன் தொடர்புடைய வர்களை கண்டறிவதற்காக பொது சுகாதார பரிசோதகர்கள் தொடர்ந்தும் சோதனைகளை மேற் கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, நேற்றைய தினம் இறுதியாக தொற்று உறுதியான மூன்று பேரும், கந்தக்காடு புனர்வாழ்வு மையத்தின் பணிக்குழு உறுப்பினராக செயற்பட்ட ஒருவரும், அவரின் பிள்ளைகள் இருவரும் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், அவர்களுடன் சம்பந்தப்பட்டவர்களை தனிமைப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாக பிரதேச சுகதார வைத்திய அதிகாரி எச்.ஏ.அபேரத்ன தெரிவித்துள்ளார்.

# சுகாதார விதிகளை இனியாவது வர்த்தமானியில் வெளியிடவும்

## மஹிந்த தேசப்பிரிய கோரிக்கை



கொழும்பு, ஜூலை 12

தேர்தல் தொடர்பான சுகாதார ஒழுங்குவிதிகள் வெளியிடப்பட்டுள்ள நிலையில் அது பிரகடனப்படுத்தப்படாமை தேர்தல் ஆணைக்குழுவை பொறுத்தவரை பாரிய பிரச்னையாக மாறியுள்ளது என்று தேசிய தோதல் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

பொதுத்தேர்தல்தொடர்பான ஒழுங்குவிதிகளை சுகாதார சேவைகள் பணிப்பாளர் வெளியிட்டுள்ளார். எனினும் அது இன்னும் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படவில்லை.

இந்த ஒழுங்குவிதிகளுக்கு ஜனாதிபதி தமது பணிப்புரைகளை வழங்கியுள்ளார். அத்துடன் சட்டமா அதிபரும் இதற்கு ஒப்புதல் வழங்கியுள்ளார் என்று மஹிந்த தேசப்பிரிய குறிப்பிட்டுள்ளார்.

எனினும் எங்கோ ஒரு இடத்தில் இது தேங்கிக் கிடக்கிறது. இந்நிலையில் சுகாதார ஒழுங்குவிதிகள் உரியமுறையில் சட்டமாக்கப்படாதபோது தேர்தல் பிரசாரங்களின்போது சுகாதார நடைமுறைகள் புறக் கணிக்கப்படும் என்று தேசப்பிரிய சுட்டிக்காட்டியுள்ளார்

எனவே இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை வெளியிடவேண்டும் என்று மஹிந்த தேசப்பிரிய அரசிடம் கோரியுள்ளார்.

# தமிழரின் வரலாற்றுத் தலங்களை பௌத்த மயமாக்கச் சதித் திட்டம்

## கண்டிக்கின்றார் மணிவண்ணன்

யாழ்ப்பாணம், ஜூலை 11

தமிழர்களின் வரலாற்றுத் தலங்களை ஆக்கிரமித்து பௌத்த மயமாக்கும் சதித் திட்டத்தைத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கண்டிப்பதாக அந்தக் கட்சியின் தேசிய அமைப்பாளரும் சட்டத்தரணியுமான விஸ்வலிங்கம் மணிவண்ணண் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கை அரசு தமிழர்களின் கலை கலாசார பாரம்பரிய பண்பாட்டு விழுமியங்களை ஆக்கிரமிப்பது மட்டுமல்லாது அதனை அழித்தொழிக்கின்ற திட்டமிட்ட வேலைகளையே தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றது.

அரசின் இத்தகைய இனவாதச் செயற்பாடுகளுக்கு பௌத்த பேரினவாதிகள் தொடர்ந் தும் ஆதரவை வழங்கி வருகின்றனர். ஏனெனில் சிங்கள அரசுகளும் அதே பேரினவாதச் சிந்தனையுடன் தான் தொடர்ந்தும் தமது நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றன.

ஆகவே சிங்கள பேரினவாதிகளால் ஆக்கிரமிக்கப்பட்டு அழிக்கப்பட்டும் வருகின்ற எமது தேசத்தைப் பாதுகாக்க வேண்டும். அதற்கு எமது தேசம் அங்கீகரிக்கப்பட்ட தீர்வொன்று எமக்குக் கிடைக்க வேண்டும். அதற்காகவே தொடர்ந்தும் நாம் செயற்பட்டு வருகின்றோம்.

குறிப்பாக அண்மையில் கூட திருக்கோணேச்சரம் மற்றும் நல்லூர் ஆகிய தமிழ் மக்களின் வரலாற்றுத் தலங் களைத் தமிழ் மக்களுக்குச் சொந்தமில்லை என்றும் அது சிங்கள மக்களுக்கே சொந்தமென்றும் புதுக்கதை விட்டுக் கொண்டிருக்கின்றனர்.

இவ்வாறாக தமிழ் மக்களின் வரலாற்றுத் தலங்களை அழிப்பது மட்டுமல்லாது அதனை ஆக்கிரமிக்கும் கைங்கரியத்தைத் திட்டமிட்ட வகையில் பேரினவாதிகள் மேற்கொண்டு வருகின்றனர். இவர்களது இவ்வாறான கருத்துக்கள் மற்றும் செயற்பாடுகளை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

அதே நேரத்தில் வரலாறு தெரியாமல் உளறுகின்ற இந்தப் பேரினவாதிகள் தாம் நினைத்ததை எல்லாம் பேசலாம் என்று கருதுகின்றனர். அவர்களது இத்தகைய கருத்துக்களுக்கு ஆதரவான நிலைப்பாடுகளையே ஆட்சியாளர்களும் வெளிப்படுத்தி வருகின்றனர்.

இலங்கைத் தீவை முழுமையாகப் பௌத்த மயமாக்கும் பேரினவாதிகளின் இத்தகைய சதித் திட்டத்துக்கமைய தமிழர்களின் வரலாற்றுத் தலங்களை ஆக்கிரமிக்கும் கபட நோக்கத்தை நாங்கள் எதிர்க்கின்றோம். அத்தகைய செயற்பாடுகளுக்கு கண்டனங் களையும் தெரிவிக்கின்றோம்.

இத்தகைய செயற்பாடுகளை ஒரு கட்டமைப்பு சார் இன வழிப்பாகவே பார்க்கின்றோம். கட்டமைப்பு சார் இனவழிப்பு என்பது பண்பாட்டு கலை கலாசாரங்களையும் அழிப்பது தான். அதன் ஒரு வடிவம் தான் இது-என்றார்.

# சுகாதார விதிமுறைகளை பின்பற்றாத வேட்பாளர்கள்

## சபாநாயகர் கரு கவலை

கொழும்பு, ஜூலை 12

பெரும்பாலான வேட்பாளர்களின் தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் உரிய சுகாதார நடைமுறைகள் பின்பற்றப்படவில்லை என சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார். தனது டுவிட்டர் பதிவிலேயே அவர் இதனை சுட்டிக் காட்டியுள்ளார்.

"கொரோனா வைரஸ் தொற்றை கட்டுப்படுத்துவதற்காக, முன்மொழியப் பட்டுள்ள சுகாதார நடைமுறைகளை பெரும்பாலான அரசியல் கட்சிகள் பின்பற்றுவது மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது. பெரும்பாலான வேட்பாளர்களின் தேர்தல் பிரசாரக் கூட்டங்கள், உரிய சுகாதார நடைமுறைகள் பின்பற்றப்படாமல் நடத்தப் படுகின்றன.

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று, முழுமையாக இல்லாதொழிக்கப்படாத நிலையில் இவ்வாறு செயற் படுவது தவறான விடயமாகும்" எனவும் அவர் அதில் குறிப்பிட் டுள்ளார்.

# நுணலும் தன் வாயால் கெடும் இதற்கு சிறீதரனே உதாரணம்

## தமிழ் தேசிய மக்கள் முன்னணி கூறுகிறது

கிளிநொச்சி, ஜூலை 12

நுணலும் தன் வாயால் கெடும். சிறீதரன் கள்ள வோட்டு போட்டாரா இல்லையாவென்பது தெரியாது. ஆனாலும் அவர் தனது வாயால் அதனை ஏற்றுக்கொண்டிருப்பதால் சட்டம் தன் கடமையைச் செய்யுமென தெரிவித் துள்ளார் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் கிளிநொச்சி மாவட்ட வேட்பாளர் மாரி முத்து கணபதிப்பிள்ளை தெரி வித்துள்ளார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று சனிக்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்து வெளியிட்டபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அவர் சட்டம் ஒவ்வொருவரிற்கும் ஒவ்வொன்றாக இருக்க முடியாது.

கள்ளவோட்டு போட்டவர் சிங்களவரா அல்லது தமிழரா, முஸ்லிமா என பார்த்து சட்டம் பாயமாட்டாது.

இதனால் சிறீதரன் தனது வாயால் சொன்னதற்கு அவர்தான் விளக்கம் வழங்கவேண்டும். நுணலும் தன் வாயால் கெடு மென இதனையே சொல்வர்.

சிலர் ஒற்றுமை ஒற்றுமை யென பிதற்றத் தொடங்கிவிட் டனர். தேர்தல்கள் வந்தால் அவர்களுக்கு அது ஞாபகம் வருகின்றது.

கடந்த பத்து வருடங்களாக ஒற்றுமையாக இருந்து கூட்டமைப்பு என்ன கிழித்ததென ஒற்றுமை பற்றி பேசுபவர்கள் சொல்லவேண்டும்.

கூட்டமைப்பைத் தேசியத் தலைவர் உருவாக்குகையில் புளொட் அமைப்பை இணைக்க அனுமதிக்கவில்லை. அவர்கள் குணம் அவருக்கு தெரிந்திருந்தது.

இப்போது வியாழேந்திரன் ஓடிவிட்டார். அப்போது தலைவர் ஏன் புளொட்டை உள்ளடக்கவேண்டாமென்றது தெளிவாக தெரிகின்றது-என்றார்.




செய்திகள்

# கச்சேரி அலுவலரை வெட்டியவர் முன்னாள் இராணுவ சிப்பாயாம்

யாழ்ப்பாணம், ஜூலை 12

யாழ். மாவட்ட செயலகத்தில் பணியாற்றும் அலுவலர் மீது வாள்வெட்டு நடத்தியவர் முன்னர் இராணுவத்தில் இருந்து விலகிய இளைஞர் என்று கூறப்படுகின்றது. இவரை யாழ்ப்பாணம் குற்றத் தடுப்புப் பொலிஸார் நேற்று முன்தினம் இரவு கைது செய்தனர்.

சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

கடந்த 8 ஆம் திகதி புதன் கிழமை யாழ். மாவட்ட செயலகம் முன்பாக மோட்டார் சைக்கிள்களில் வந்த நால்வர் கொண்ட குழு சுற்றுச்சூழல் திணைக்கள உத்தியோகத்தர் மீது வாள்வெட்டு நடத்தி விட்டு தப்பிச் சென்றது.

பட்டப்பகலில், பாதுகாப்பு நிறைந்த யாழ். மாவட்ட செயலகம் முன்பாக இந்தச் சம்பவம் இடம்பெற்றிருந்தது.

இது தொடர்பில் விசாரணைகளை நடத்திய பொலிஸார் இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் 6 பேரைக் கைது செய்தனர்.

அவர்கள் நீர்வேலியில் தங்கியிருந்த வீட்டை சோதனையிட்ட பொலிஸார் வாள்கள், கைக்கோடரிகள், இராணுவ சீருடைகளை மீட்டனர். கைதானவர்களை நீதி மன்றில் முன்னிலைப்படுத்தி விளக்கமறியலில் வைத்து விசாரிக்க அனுமதி பெற்றனர்.

இவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் இராணுவத்தில் இருந்து விலகிய நபர் ஒருவரை தேடி வந்தனர். இந்நிலையில் அவரை கோப்பாய் பொலிஸார் நேற்று முன்தினம் இரவு கைது செய்தனர்.

அவரிடம் தொடர்ந்து விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



# வாக்களிப்பு ஒத்திகை நேற்று கிளிநொச்சியில்

கிளிநொச்சி, ஜூலை 12

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நேற்று மாதிரி வாக்களிப்பு இடம்பெற்றது.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ள தேர்தல்கள் அலுவலக வளாகத்தில் மாதிரி வாக்களிப்பு நிலையம் அமைக்கப்பட்டு சுகாதார விதிகளைப் பின்பற்றி தேர்தலில் வாக்களிப்பது எப்படி? என்பது தொடர்பான செயற்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் றூபவதி கேதீஸ்வரன் தலைமையில் இந்த வாக்களிப்பு ஒத்திகை இடம்பெற்றது. இதன் போது மாவட்ட செயலக மற்றும் பிரதேச செயலக ஊழியர்கள் மாதிரி வாக்களிப்பு முறை தொடர்பான செயற்திட்டத்தில் பங்கு கொண்டனர்.

இந்நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர், பிரதேச செயலாளர்கள், தேர்தல் உத்தியோகத்தர்கள், பொலிஸார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

இனநலனுக்காக பேரம்பேசும் சந்தர்ப்பத்தை தவறவிட்டவர்கள்

# அமைச்சுக்காகப் பேரம் பேச வாக்குக் கேட்பது வெட்கக்கேடு

## “மாம்பழம்” ஐங்கரநேசன் சாடல்



மைத்திரி - ரணில் இணைப்பில் நல்லாட்சி உருவான போதும், பின்னர் நல்லாட்சி அரசாங்கத்திற்கு நெருக்கடிகள் ஏற்பட்டபோதும் அந்த அரசாங்கத்துக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரே முண்டு கொடுத்து நின்றார்கள். அப்போது இனத்தின் நலனுக்காகப் பேரம்பேசும் சந்தர்ப்பத்தைத் தவறவிட்டவர்கள் பாராளுமன்றத் தேர்தலின் பின்னர் அமையவிருக்கின்ற புதிய அரசாங்கத்தில் அமைச்சர்களாவதற்குப் பேரம்பேசத் தங்களுக்கு வாக்குக் கேட்பது வெட்கக் கேடானது - என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவரும் வடமாகாண முன்னாள் விவசாய அமைச்சருமான பொ. ஐங்கரநேசன் கூட்டமைப்பின் தற்போதைய நிலைப்பாடு குறித்துக் கடுமையாகச் சாடியுள்ளார்.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் சுயேச்சைக் குழுவாக மாம்பழம் சின்னத்தில் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடுகின்றது. இது தொடர்பான தெருமுனைத் தேர்தல் பரப்புரைக் கூட்டம் நேற்று இரவு யாழ்ப்பாணம் பிறவுண் வீதிப் பகுதியில் நடைபெற்ற போதே பொ.ஐங்கரநேசன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் வடமராட்சியில் நடைபெற்ற தேர்தல் பரப்புரையில் புதிய ஆட்சியில் கூட்டுப்பொறுப்பு டன் அமைச்சரவையில் இணைவது குறித்துப் பேசியுள்ளார். மைத்திரி - ரணில் கூட்டாட்சியில் குறைந்தபட்சம் அரசியல் கைதிகளின் விடுதலை, காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பானவர்களின் பிரச்னை போன்றவை தொடர்பாகவேனும் நிபந்தனைகளை விதித்து அவற்றுக்கான தீர்வுகளைப் பெற்றிருக்கமுடியும். ஆனால், அவர்கள் அங்கஜனுக்குப் பிரதி சபாநாயகர் பதவி வழங்கக்கூடாது, டக்ளஸ் தேவானந்தாவுக்கு அமைச்சர் பதவி வழங்கக்கூடாது போன்ற நிபந்தனைகளை விதித்துத் தாங்கள் நிழல் அமைச்சர்களாகப் பதவி வகிக்க விரும்பினார்களே அல்லாது இனத்தின் நலன் சார்ந்து எதனையும் செயற்படுத்தவில்லை.

சுயேச்சைக் குழுக்கள் தங்களது வாக்குகளைப் பிரிப்பதற்காகக் களமிறக்கப்பட்டுள்ளதாக அவர்கள் பேசி வருகின்றனர். நாங்கள் சுயேச்சைக் குழுவாகப் போட்டியிட்டாலும் தேர்தலின்போது மாத்திரம் தோன்றி மறையும் மழைக் காளான்கள் போன்றவர்களல்லர். தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் சூழலியம் என்ற கோட்பாட்டை உள்வாங்கி வலுவான ஒரு அரசியல் கட்சியாகப் பரிணாமித்திருக்கின்றது. தேர்தல் ஆணையத்தில் கட்சிப் பதிவுக்காக விண்ணப்பித்திருக்கிறோம். தேர்தல் உரிய காலத்திற்கு முன்னரே அறிவிக்கப்பட்டதால் கட்சிப் பதிவு தாமதப்பட சுயேச்சையாகக் களமிறங்கியுள்ளோம். “








# இருபாலையில் அரச முன்பள்ளிக்கான வேலைகளை பிரதேச சபை ஆரம்பித்தது

யாழ்ப்பாணம், ஜூலை 12

இருபாலையில், பிரதேச சபை நிதியில் அரச முன்பள்ளி அமைப்பதற்கான வேலைகளை வலிகாமம் கிழக்கு பிரதேச சபை ஆரம்பித்து வைத்துள்ளது.

கடந்த வாரம் வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தலைமையில் உறுப்பினர்கள், உத்தியோகத்தர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு சம்பிரதாயபூர்வமாக வேலைகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

இது குறித்து வலி. கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் கருத்துத் தெரிவிக்கையில்,

கொரோனா தொற்று எச்சரிக்கை காணப்படுவதனால் வரையறுக்கப்பட்ட நபர்களுடன் அமைதியான முறையில் வேலைகளை ஆரம்பித்துள்ளோம்.

வலி. கிழக்கு பிரதேச சபையின் கோப்பாய் உப அலுவலகத்திற்கு உட்பட்ட பிரதேசத்தில் அரச முன்பள்ளி ஒன்றை நிறுவும் முயற்சியாக இச் செயற்றிட்டத்தை 41 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா மதிப்பீட்டில் நாம் முன்னெடுத்துள்ளோம்.

ஏற்கனவே பிரதேச சபைக்குச் சொந்தமாகக் காணப்பட்ட தண்ணீர்த்தாங்கி அமையப்பெற்றுள்ள எஞ்சிய வளாகத்திலேயே இம் முன்பள்ளி அமைக்கப்படுகின்றது. இவ்வேலைகள் மூன்றுமாத கால ஒப்பந்தத்தில் கேள்விகோரல் முறையில் வழங்கப்பட்டுள்ளன.

காலக்கிரமத்தில் நீர்வேலி, உரும்பிராய் உப அலுவலகங்களின் கீழும் அரச முன்பள்ளிகளை ஆரம்பிக்கும் எண்ணமும் தேவையும் எம்மிடம் உள்ளன. சிறுவர்களின் போசாக்கு மற்றும் நலநோன்பு விடயங்களில் எமது சபை அதீத கவனம் செலுத்த விரும்புகிறது - என்றும் அவர் கூறினார்.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
வழங்குபவர் : சொல்லருவி லலீசன்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
வழங்குபவர் : சைவ சித்தாந்த பண்டிதன் சிவஸ்ரீ.தியாக.சோமஸ்கந்தராஜக்குருக்கள்
7.05 மணி : உளவியல் கருத்து
வழங்குபவர் திருதி கோகிலா மகேந்திரன்
7.15 மணி : கதைவழி அறமொழி
வழங்குபவர் : திரு. எப்.எக்ஸ்அன்ரன் கோட்டக்கல்விப் பணிப்பாளர், நல்லூர்
7.30 மணி : பத்திரிகைகள் ஒரு பார்வை
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : காலைக்கதிரொளி
10.30 மணி : அறிந்தும் அறியாமலும்
11.00 மணி : ஹொலிவுட் சுப்பர் 10
**பகல்**
12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)
1.00 மணி : மழலைகள் நேரம்



1.30 மணி : வீக் என்ட் மூவி
ஹொட்டேல் ஃபோர் டோக்ஸ்




த நட் க்றக்கர்
திரைப்படங்களில் இருந்து காட்சிகள்
4.30 மணி : காட்டூன் தமிழ்
5.00 மணி : கலாய்க்கலாம் வாங்க (நேரலை)
6.00 மணி : திரைக்கதம்பம்
**இரவு**
7.00 மணி : ஸ்பொட் லைட்
சுமந்திரனுடனான நேர்காணல்



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சொல்லாடுகளம்
10.00 மணி : பதிவு




DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு
**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
வடிவேல் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா
**இரவு**
8.00 மணி : திரைப்படம்
விஜய் , கீர்த்தி சுரேஷ் நடிப்பில்
சர்கார்
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

DAN TELEVISION VASANTHAM HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : ஒஸ்கார் ராகங்கள்
10.00 மணி : டான் மிக்ஸ் மசாலா (நேரலை)
**பகல்**
12.00 மணி : நட்சத்திரம்
1.00 மணி : மஞ்சள் வெயில் மாலையிலே (நேரலை)
3.00 மணி : இசை மேடை
4.00 மணி : வீக் என்ட் எக்ஸ்ப்றஸ் (நேரலை)
5.00 மணி : என்றென்றும் இசை
**இரவு**
7.00 மணி : பாட்டு தலைவர்கள்
8.00 மணி : பச்சை கிளி முத்துச்சரம்
9.00 மணி : நேசித்த நினைவுகள்
10.00 மணி : பக் ரு பக்

கல்வி tv CHANNEL-1

**காலை**
6.00 மணி : க.பொ.த உயர்தரம்
(கலைப்பிரிவு) ஊடகம் மறு ஒளிபரப்பு
7.00 மணி : 10.00 மணி - க.பொ.த உயர்தரம்
(வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
மறு ஒளிபரப்பு
8.00 மணி : க.பொ.த உயர்தரம்
(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்
மறு ஒளிபரப்பு
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு)
அளவியல்
10.00 மணி :பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) கணக்கீடு
11.00 மணி : க.பொ.த உயர்தரம்
(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) இரசாயனவியல்
**பகல்**
12.00 மணி : க.பொ.த உயர்தரம்
(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு)
2.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
3.00 மணி : தரம் 5 மாதிரி வினாத்தாள்
4.00 மணி : தரம் 5 சுற்றாடல்
5.00 மணி : தரம் 5 கணிதம்
6.00 மணி : தரம் 6-9 ஆங்கிலம்
**இரவு**
7.00 மணி : பொது சிங்களம்
7.30 மணி : க.பொ.த உயர் தரம் மாதிரி வினாத்தாள்

ஓம் ரிவி

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.20 மணி : சின்மய சிந்தனை
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா - 01
10.00 மணி : புதியதோர் தொடக்கம்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்
**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா - 02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்
**இரவு**
7.00 மணி : அருளுரை
7.30 மணி : திருவாசகம்
08.00 மணி :திருவிழா - 01

CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : ஆலயப் பாடலகள்
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : மாதா மன்றாட்டு மாலை
10.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
11.00 மணி : ஜெபமாலை
**பகல்**
12.00 மணி : திருகோணமலைத்திருப்பலி
1.00 மணி : மட்டக்களப்பு திருப்பலி
2.00 மணி : நற்சிந்தனை
3.00 மணி : மறை வகுப்பு
4.00 மணி : நிதர்சனம்
4.30 மணி : திருகோணமலை திருப்பலி
5.30 மணி : பாடல்
5.30 மணி : பாடல்

Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய சிறுவர் பாடல்
8.00 மணி : சற் வித் குட்டீஸ்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : வேர் கொள்
11.00 மணி : மனிதம்
11.30 மணி : சுக வாழ்வு
12.00 மணி : லுகர் அதான்
**பகல்**
12.30 மணி : அன்னிஸா
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
4..00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : சற் வித் குட்டீஸ்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்
**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : பாடல்
8.30 மணி : மனிதம் வித் றிஸ்வான்
9.00 மணி : Bayan
10.00 மணி : சீரிஸ்

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிரைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 12.07.2020 அன்று வெளியிடப்பட்டது.